**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | |
|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC 256 of 2025 |

| | |
|---|---|
| Depositions of PW -2 witness for ________ | Prosecution<br>Defence<br>Court |

Name : பாக்கியலட்சுமி

Father's Name : க/பெ. கருப்புசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January** 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை மாவட்டம், நடுத்தோட்டம், காடுவெட்டி பாளையத்தில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தறிக்குடன் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும் அவர்கள் எனது பக்கத்து தோட்டத்தைச் சார்ந்தவர்கள். கடந்த 28.05.2020 ஆம் தேதி பகல் சுமார் 12.15 மணியளவில் நான் எங்களது தோட்டத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பொழுது எங்கள் இடத்தில் இருந்த தென்னை மரம், வேப்பமரம், எலுமிச்சம் கன்று, மாடு மேய்க்கும் பகுதி ஆகிய இடங்களில் களைக்கொல்லி மருந்தை மருந்தடிக்கும் மெஷின் மூலமாக மருந்தை ரங்கசாமி என்பவர் அடித்து கொண்டு இருந்தார். நான் எதிரி ரங்கசாமியுடன் ஏன் எங்கள் இடத்தில் களைக்கொல்லி மருந்து அடிக்கிறீர்கள் என கேட்டேன். அதற்கு எதிரி ரங்கசாமி கண்டாரோலி, தேவிடியா அப்படி தான் அடிப்பேன் என்று திட்டினார்.

2. மேலும் என்னை பார்த்து என்னை நிம்மதியாக இருக்க விட மாட்டேன் எனவும் சொன்னார். பின்னர் நாங்கள் எங்கள் தோட்டத்தில் பொருத்தி இருந்த கேமரா இல்லாத இடமாக

பார்த்து ஒன்றாம் எதிரி சேகர் மற்றும் மூன்றாம் எதிரி சரஸ்வதி மூன்று பேரும் அங்கு வந்து நான் மூன்று பேரிடமும் மாடு மேய்கின்ற இடம் மருந்து அடிக்க வேண்டாம் என சொன்னேன். அப்போது மூன்றாம் எதிரி சேகர் அவரது தந்தை இரண்டாம் எதிரியிடம் இன்னொரு முறை மருந்து அடியுங்கள் மாடு செத்தால் சாகட்டும் என சொன்னார். மேலும் ஒன்று மற்றும் மூன்று எதிரிகளும் என்னை கண்டாரோலி, தேவடியா மகளே என கெட்ட வார்த்தைகள் பேசினார்கள். அப்பொழுது எங்கள் குடோனில் தறி ஓட்டிக் கொண்டிருந்த பிரபாகரன், செல்வராஜ் இருவரும் வெளியே வந்தார்கள். அப்பொழுது எனது கணவரும் இல்லாததால் நான் சென்று விட்டேன். பின்னர் எனது கணவர் வந்தவுடன் நடந்த சம்பவத்தை தெரிவித்தேன். எனது கணவர் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் எழுத்து மூலமாக புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>ஒன்று முதல் மூன்று எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ரங்கசாமி மருந்து அடித்துக் கொண்டிருந்ததாக சொல்லக்கூடிய பகுதி வண்டி தடம் என்றால் சரிதான். ஆனால் எங்கள் வேலிக்குள் இருந்த செடிகளுக்கும் மருந்து அடித்துக் கொண்டிருந்தார்கள். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்பந்தமாக சிவில் வழக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். இரண்டாம் எதிரி பூச்சி மருந்து அடித்துக் கொண்டு இருந்ததாக சொல்லப்படும் சமயம் நான் மட்டும் இருந்தேன் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் சம்பந்தமாக நான் எனது கணவருக்கு எப்பொழுது தகவல் சொன்னேன் என்றால் 29.05.2020 ஆம் தேதி சொன்னேன்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திற்கு மறுநாள் எனது கணவரிடம் சொன்னேன் என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் இல்லாததால் அன்றைய தினம் செல்லவில்லை. எனது கணவர் வீட்டுக்கு எப்போது வந்தார் என்றால் 29.05.2020 ஆம் தேதி வந்தார், நேரம் ஞாபகம் இல்லை. எனது கணவர் புகார் அளிக்க எத்தனை மணிக்கு சென்றார் என்றால் 30.05.2019 ஆம் தேதி காலை சென்றார். நேரம் எனக்கு சரியாக தற்போது ஞாபகம் இல்லை. எனது கணவருடன் நான் உடன் செல்லவில்லை. எனது கணவர் புகாரியில் என்ன எழுதி உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தினம் போலீசார் சம்பவ இடம் வந்தார்கள் என்றால் சரிதான்.

3. போலீசார் எத்தனை மணிக்கு சம்பவ இடம் வந்தார்கள் என்றால் காலை சுமார் 11.00 மணியளவில் வந்தார்கள். போலீசார் எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. சம்பவ இடம் வந்த போலீசார் எங்கள் இடத்தை பார்வையிட்டு அருகில் இருந்தவர்கள் தோட்டத்திற்கும் சென்று விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து போலீசார் களைக்கொல்லி அடிக்க பயன்படுத்தும்

மிஷின் மற்றும் களைக்கொல்லி இருந்த டப்பாவை கொண்டு சென்றார்களா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து தறிகுடோனில் வேலை செய்தவர்களிடம் நான் தான் சம்பவம் குறித்து தகவல் சொன்னேன் என்றால் சரியல்ல, சத்தம் கேட்டு அவர்களாகவே வெளியே வந்தார்கள்.

4. எதிரிகள் எங்கு நின்று கொண்டிருந்த பொழுது கேட்டேன் என்றால் எங்கள் கேட்டின் முன்பாக பேசினேன். செல்வராஜ் மற்றும் கார்த்திகேயன் இருவரும் மருந்து அடித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும்போது எங்கிருந்தார்கள் என்றால் தறிகுடோனில் தறி ஓட்டிக்கொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டு வெளியே வந்தார்கள். எனது கணவர் அன்றைய தினம் சென்னைக்கு சென்று இருந்தார். எனது மகனுக்கு சென்னையில் வீடு உள்ளது. அவரை பார்ப்பதற்காக சென்று இருந்தார். எனது கணவர் அன்றைய தினம் வீட்டில்தான் இருந்தார் என்றும் எதிரிகளின் கேமராக்களில் எனது கணவர் இருந்ததற்கான பதிவுகள் பதிவாகி உள்ளது என்றால் சரியல்ல. சாட்சி முருகேசன் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவத்தின் பொழுது முருகேசன் வந்தார் அதன் பின்னிட்டு வந்தாரா என அதன் பின்னிட்டும் வந்தார். சம்பவம் நடந்த மறுநாளும் அன்றைய இரவும் வந்தார்.

5. போலீசார் சம்பவ இடம் வந்த பொழுது முருகேசன் சம்பவ இடம் வரவில்லை என்றால் சரியல்ல, அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் வந்த தினத்தன்று வந்தார். முருகேசன் சம்பவ இடம் வந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்த பொழுது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், எனது கணவர், தறி ஓட்டும் நபர்கள் இருந்தார்கள். மேலும் வெளியே இருந்து அருகில் இருந்தவர்கள் வந்தார்கள். அவர் யார் என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் சிவில் வழக்கு நடந்து வருவதாலும் முன் பகையை மனதில் வைத்துக்கொண்டு எனது கணவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் போய் சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.12 18:44:54 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**